உ

கடவுள் துணை.

கோவிந்தசதகம்.

இஃது

திருத்தணிகைச்

சரவணப்பெருமாளையரவர்கள்

பிரதிக்கிணங்க

குவளைமாநகரம்

சிநிவாசமுதலியாரவர்களாற்

பார்வையிடப்பட்டு,

பரமசிவமங்கலம்

முநிசாமிமுதலியாரவர்களால்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை-அணா-௪.

MADRAS:

PRINTED AT THE LYCEUM PRESS.

1861.

உ

கடவுள் துணை.

கோவிந்தசதகம்.

காப்பு.

என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான் ... *
என்று மெனக்கே பிரானுவான் - என்றும்... ... *
பிறவாத பேராளன் பேராயிரமும்... ... ...*
மறவாம னெஞ்சமே வாழ்த்து... ... ... *

மாவேழங் கூப்பிட வந்தாயுலக வழக்கச்சொல்லில்
பாவேற வேயுனக் கோர்சத கஞ்சொலப் பாரதியேன்
றாவேற வாழ்த்துகின் றேனெனைக் காத்தரு ளுன்முகற்குங்
கோவேசக்ராயுத னேயச்சு தானந்த கோவிந்தனே. (க)

செடிக்கொரு வேங்கை குடிகொண்ட காடெனத் தேசத்திலே
அடிக்கொரு தீங்குசெய் வாராத் துரந்தர சாளவிந்தப்
படிக்கொரு மன்னருண் டானு லுழுது பயிரிடுமக்
குடிக்கொரு சேதமுண் டோவச்சு தானந்த கோவிந்தனே. (உ)

கட்டாண்மைவேந்தர் பெருமை யெண்ணுதவர் கன்னத்தடி
பட்டாலல் லாமல் வணங்கார் விடமுட்படாமற்சும்மா
தொட்டா லதைப்பிள்ளைப்பூச்சியென் பார்மூட் சுறுக்கெனவே
கொட்டாமற் றேளென்ப ரோவச்சு தானந்த கோவிந்தனே. (ங)

பாலிட்டமாகிய நீர்போற் கலந்து பகருங்கல்வி
நூலிட்ட கேள்விக்கு ளாவார்நல் லோரிரு நூறுதரம்
மேலிட்ட புத்திசொன் னாலுங் கயவர்க்கு வெந்தபுண்ணில்
கோலிட்டவர்றெக்கு மேயச்சு தானந்த கோவிந்தனே. (ச)

கழுக்கட்டை யேற்றினுங் காசொன் றிலையெனக் கைவிரித்தே
மழுக்கட்டி யேந்தவல் லாராத்தொழிலிடைமன்னர்வைத்தால்
முழுக்கட்டி பேர்த்துக் கிழங்குண் ணும் பன்றி முகந்தனிலே
கொழுக்கட்டி விட்டதொப் பாமச்சு தானந்த கோவிந்தனே. (ரு)

நீலங் கவர்விடப் பாம்பைப் பிடார னியமிக்கவே
ஆலங் கரந்திட் டெலியுடன் வாழ்த லரசர்க்கஞ்சிக்
காலங் கருதி வலியா ரெளியனாக் காண்கில னு
கூலனைப் போலிருப் பாரச்சு தானந்த கோவிந்தனே. (௬)

தடுப்பார் புலியையும்பாம்பையும்வாய்க்கட்டித்தாங்கிக்கையால்
எடுப்பார் மழுவைய நீர்மே னடப்ப ரெவருமெச்ச
அடுப்பார் சபையினி னூற்றெட்டடிக் கம்பத் தாடுவர்பொன்
கொடுப்பா ரரியுர்கண்டா யச்சுதா னந்த கோவிந்தனே. (௭)

ஆலிக்க வாழ்ந்துண் டிருந்தாலு மென்ன வயன்வகுத்த
சோலிக் கணக்கின் படி தப்புமோ நளன் றெல்புவியும்
சாலிக்கு நேர்தன் மனையுமிழந்தொரு சாரதியாய்
கூலிக்கும் வேலை செய்தா னச்சுதானந்த கோவிந்தனே. (௮)

எடுத்தாலு மூறு மிறைத்தாலு மூறு மிடைநடுவே
தடுத்தாற் றடைபடுமோமணற் கேணித்தண் ணீரதுபோல்
அடுத்தாலாவாழ்விக்குஞ்செல்வமுண்டானவரள்ளிச்செம்பொன்
கொடுத்தாற் குறைவருமோ வச்சுதானந்த கோவிந்தனே. (௯)

ஈந்தா யெனச்சென் றிரப்பவர்க் கீபவ ரெவ்வளவு
தந்தாலு நல்லதிகழ வொண்ணு தெங்குஞ் சஞ்சரித்து
வந்தாற் பெருகுங் குளத்துக்குப் பெய்யுமழைத்துளிகள்
குந்தாணிப் போற்பெய்யுமோ வச்சுதான ந்த கோவிந்தனே. (௰)

மீடார் குலத்தினி லாகாத பிள்ளையைப் பெற்றெடுத்தால்
வாடாதும் வாடிக் குலராச மாய்விடு மாறுபடத்
தாடாண்மை யாளர்கைக் குள்ளாய்த் தருக்குலஞ் சாயவெட்டும்
கோடாலிக் காம்பல்லவோவச்சு தானந்த கோவிந்தனே. (௰௧)

எடுத்தாலும் பிச்சை யமுது நன்றே யில்லை யென்னினுயிர்
விடுத்தாலும் வாசிநட் பில்லார் மனையில் விருந்தெனப்போய்
அடுத்தால தேதனாக் காசுக்குப் போம்வெட்க மாயிரம்பொன்
கொடுத்தாலுந் தான்வருமோ வச்சு தானந்த கோவிந்தனே. (௰௨)

உணத்தக்க நன்மருந் தாற்பிணிபோ மென்றுலகி லுள்ளோர்
பணத்துக்குக் கொண்டு பரிகரிப்பார் விடம்பாய்ந்துசெத்த
பிணத்துக்கும்பச்சிலை யுண்டு புல்லோர்க்குப் பிறக்குமவ
குணத்துக்குச்சொன் மருந்தே தச்சுதா னந்தகோவிந்தனே. (௰௩)

மலைப்பாற் குறுமுனி போற்றும் புலவர்வடித்ததமிழ்
விலைப்பாற்படுத்திக்கொள்வார்க்குண்டுகீர்த்திவிதண்டைசெய்து[று
கலைப்பார்க்கும்பேய்கொண்டநாய்களைப்போற்பல்லைக்காட்டி நின்
குலைப்பார்க்குங்கீர்த்தியுண்டோவச்சுதானந்தகோவிந்தனே. (௧௪)

தமத்தி லொளிவிடும் பொற்பூஷணங் கடலைச்சுமையாச்
சுமக்கினு மாதர்க் கழகா கணவன் றொடா திருந்தால்
கமத்திப் பொதிச்சுமை யாச்சுமந் தாலுங் கழுதையுங்குங்
குமத்தின் மணங்கொள்ளுமோவச்சு தானந்தகோவிந்தனே (௧௫)

உடுப்பாருண்பார்தமைப் போனினையாரொரு வன்பிழைப்பைக்
கெடுப்பாரைத் தெய்வங் கெடுக்குமென்றேசொல்லக்கேட்டிருந்து
விடுப்பாரன் றேபுல்லர் துர்க்குணமுற்றும்விதரணத்தால் [ம்
கொடுப்பார் தமைத்தடுப்பா ரச்சுதா னந்த கோவிந்தனே. (௧௬)

நாட்டம் பணத்தில்வைக் குங்கள்ள லோபர் நன்னாட்டவர்கள்
ஈட்டந் தனைக்கண்டு இட்டுவரோ வினா தேடிமனைத்
தோட்டம் புகுநரி யஞ்சாமனெஞ்சந் துணிந்துசந்தைக்
கூட்டந் தனில்வருமோவச்சுதானந்தகோவிந்தனே. (௧௭)

இறைமுறையேழைக் குடிகளை நோகச்செய் தென்பசும்பொன்
அறையிடும் பொக்கிஷந் தானிரம் பாதர சற்கியல்போ
நிறைகடற் கென்ன குறைவோ ஏளப்படி நீரிறைத்துக்
குறைவறச் செய்பவ ராரச்சுதானந்த கோவிந்தனே. (௧௮)

இட்டி யொருவன் றலைக்குளிரத்நங் கிளைத்துதென்றால்
வெட்டி வெளிசெய்ய வேணுமென் றேவிரும் பார்பெரியோர்
எட்டினை மாத்திரம் புத்தியில்லா ரெருதீன்ற தென்றால்
கொட்டிலுட் கட்டுமென் பாரச்சுதானந்த கோவிந்தனே. (௧௯)

சலத்தால் விளைகின்ற சிப்பியின்வாய் முத்தின் றற்குலத்தைச்
சொலத்தா னெவரு மிகழாரரசர் தொகுத்தணிவார்
அலத்தா மதரறி வில்லார் சனனங்க ளாகியநற்
குலத்தாற் பெருமையெண் ணாரச்சுதானந்த கோவிந்தனே. (௨௦)

களிப்பாற் றுரைக ளறிவீனனைக்கைப்பிடித்துச்செல்வம்
அளிப்பாரன் றேபின் னகைக்கிட மாமொன்று மாவதில்லா
வெளிப்பாற் றிரிகின்ற நாய்க்குலந் தன்னைநல் வீட்டினிடைக்
குளிப்பாட்டிவைத்தனவாமச்சுதானந்தகோவிந்தனே. (௨௧)

செம்பிடு மேனியுருக்கொண்ட தெய்வத்தை தெண்டனிட்டு
நம்பிட வேண்டும் வரம்பெற லாநம்பினோர்க்குதவா
வம்பிடு லோபத் துரைத்தனப்பேய்களை மன்னனொன்று
கும்பிட வுந்தகு மோவச்சு தானந்தகோவிந்தனே. (௨௨)

வரங்கா தலிக்குந் தவமுடை யார்வங் கணமெவர்க்கும்
உரங்காணு நன்மை பெறலாங் கயவ ருடன்கலந்தால்
அரங்கார் சபையிடைத் தாதன்கரத்தி லகப்பட்டதோர்
குரங்கா யலைவர்கண் டாயச்சுதானந்தகோவிந்தனே. (௨௩)

சோட்டைப் புணர்ந்து ரணவேட்டையாடுந் துரைகள்தங்கள்
நாட்டைப் புரப்பது ஞாயங்கொடுப்பது ஞாயமன்றே
வீட்டுக் குணம்பி யடைக்கலச் சிட்டுவெண் முட்டையிடும்
கூட்டைக் குலைப்பர்க ளோவச்சுதானந்தகோவிந்தனே. (௨௪)

சடத்துக் கழகென்பர் தான்கற்ற கல்வியத் தன்மையல்லால்
இடத்தக்க பூஷணந் தானணியாவிடி லேசுவரோ
புடத்திற் படத்தங் கக்கட்டி யுருக்கிப்பொருந்தியபொன்
குடத்துக்குப் பொட்டழகே னச்சுதானந்தகோவிந்தனே. (௨௫)

படியாளு மன்னர் மநுநீதி தப்பும் படிநடந்தால்
விடியாது நாடு மழை பொழியாது விளைவுகுன்றும்
பொடியார் பசும்புன் னெருப்பெழக்காயுமுட் பூவிளைந்துங்
குடியா ரிருக்கவல் லாரச்சுதானந்த கோவிந்தனே. (௨௬)

பாவுக் கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்ப்பூங்
காவுக் கழகு மயிலுங் குயிலுங் கண்டாய்கமலப்
பூவுக் கழகு மணமுந் திருவும் புவிபுரக்கும்
கோவுக் கழகு செங்கோலச்சு தானந்த கோவிந்தனே. (௨௭)

மட்டுப்படாத வனுமாரசோக வனமழித்துக்
கட்டுப் பட்டாரிந் திரசயித் தாற்சேர்த்தன் காரியத்தால்
முட்டுப் பட்டாலுஞ் சயங்கொள்ளவேண்டும் பொன்மோதிரக்கைக்
குட்டுப்பட் டாற்குறை யோவச்சு தானந்தகோவிந்தனே. (௨௮)

இயல்புடன் றிக்குவிசயங்கொள்வேந்தர்க் கென்றுமப
செயம்வருங் காலந் திரிவாரவர்திரு வுந்திறமும்
புயபலமுங் கெடும் விக்கிர மாதித்தன் போர்பொரப்போய்க்
குயவன்கை யான்மடிந்தா னச்சுதானந்தகோவிந்தனே. (௨௯)

எள்ளாடும் வாணியர் செக்கடித் துண்டிடு மீனமொன்றும்
விள்ளா ரவர்க்குப் பவிஷ—வந்தா னித்தம் வேலைசெய்பத்
தள்ளா தடிபடும் வெள்ளாட்டி மேற்சன்ன தங்கும்பிடு
கொள்ளாமற் போவதுண் டோவச்சு தானந்த கோவிந்தனே .(௬௦)

சலிக்கக் கணக்கென்ன தான்பெற்ற பிள்ளைக்குத் தாய்முலைப்பால்
ஒலிக்கக் கனிந்தழ வூட்டிவளர்ப்பள் பின்னும் வினையால்
பலிக்குட் படிலன்னை பெண்செய்வள் பாக்கியம் பாலடையில்
குலுக்கிப் புகட்டு விளோவச்சு தானந்த கோவிந்தனே. (௬௧)

தளத்தைக் கண்டஞ்சக்கு றுமன்னர் கப்பந் தரச்சொல்வர்போர்க்
களத்துட்படவவர் சீமையை வேந்தர்கைக் கொண்டழித்தால்
விளைத்திட்ட மீன்களைக் காகம் பருந்து விருந்துண்ணவே
குளத்தைக் கலக்கிய தாமச்சு தானந்த கோவிந்தனே. (௬௨)

தோட்டியைப் போலுழைப் பார்பொருட்டேடித் தொகைபெரு
பூட்டியறைக்குட் புதைத்து வைப்பார் புசியாரெவர்க்கும் [க்கிப்
ஈட்டிய தேனைப் பலபூவினிற் சென்றெடுத் தெடுத்துக்
கூட்டி விழப்பனவா மச்சு தானந்த கோவிந்தனே. (௬௩)

சொல்லைப் புரட்டுங் கொடுங்கோன் மணியத்திற்றேஷியெண்ணார்
கல்லற் படுத்திக் குடிகளை நோகக் கணக்கெழுதி
எல்லைக்கு ளான நிலம்பாழ் படிற்பிடித் தேருழுத
கொல்லைக் கடமை விடா ரச்சுதா னந்த கோவிந்தனே. (௬௪)

இட்டு நோற்றுப் பிறந்தார் செல்வ முற்று மிராதவதிப்
பட்டு நூற்றுக்கு மிருந் துழைத் தாலும் பவுஷேப்துமோ
விட்டு நோக்குங் கப்பலோடியுமே விடியாமனையில்
கொட்டை நூற்றே விடியும் மச்சு தானந்த கோவிந்தனே. (௬௫)

நிறைந்தே வருங்கப்ப லாயிரந் தன்னினின் றோர்கப்பலுன்
மறைந்தே திசைதப்பிற் றாழ்வென்றெண்ணார்மிக்கவர்த்தகர்காட்
டுறைந்தே வளர்புள்ளி மானுக் குடம்பி லொருபுள்ளிதான்
குறைந்தே தல்லா திருந்தே தச்சு தானந்த கோவிந்தனே. (௬௬)

ஒளித்தா லுந் துர்க்குணம் போமோ குருவுப தேசமந்த்ரம்
அளித்தாலும் புல்லர் நல்லோ ராவரோசென் றடுத்தடுத்துக்
களித்தா யிரந்தரங் காகங்கள் வீழ்ந்து கங்காநதியில்
குளித்தாலு மன்னமொவ்வா வச்சுதா னந்த கோவிந்தனே. (௬௭)

தருவிப்பர் மன்னர்கள் கையிளைத் தாறெனத் தம்மை நம்பி
மருவித் திரியுஞ் சனங்கள்பசி கொண்டு வாட்டமெய்தார்
பருவக் குறிப்பின்றிச் சாவிபட்டாலும் பயிர்க்கொல்லையில்
குருவிக் கிடைபஞ்ச மோவச்சு தானந்த கோவிந்தனே. (௩௮)

மொழிபின் படிநட வாடன் கணவனை மோசஞ் செய்து
பழியுஞ் சுமக்கும் படிசெய்வ ளம்பப் படாள்விசிகம்
பொழியுஞ் சமரிடை ராவுத்தனைத் தள்ளிப் போட்டசுவம்
குழியும் பறித்தன வாமச்சு தானந்த கோவிந்தனே. (௩௯)

அடித்தமு தூட்டி வளர்த்திடுந் தாய்தன் னகமெலிவாய்
மிடித்திடிற் றன்பெற்ற பிள்ளைகளைக்கைவிட நினையாள்
பொடித்தெழும் பிஞ்சு திரளாகிற் பாரம் பொறுக்கும்படர்
கொடிக்கென்ன காய்கன மோவச்சு தானந்தகோவிந்தனே. (௪௰)

தண்டா ரணியு மரசிளம் பாலகர் தம்மையெதிர்
கண்டாலிளைய ரென்றெண்ண வொண்ணாது கண்டாயெவரும்
அண்டா நெருப்புச் சிறிதென்று முன்றுனையின் முடிந்து
கொண்டா லதுசுடுங் காணச்சுதா னந்த கோவிந்தனே. (௪௧)

பிஞ்சிற்பருவ முலைவிலைப் பெண்கள் பெறும் பொருட்டால்
வஞ்சிக்கும் வித்தை குலவித்தை தானே வருமெவர்க்கும்
மிஞ்சிக் குளப்புன னீச்சுப் பழக்கிவித்தாரெவர்மீன்
குஞ்சுக்குத் தற்குணங் காணச்சுதானந்தகோவிந்தனே. (௪௨)

விடுபோர் முகத்தி னகைப்பாரெனுஞ்சுத்த வீரர்சண்டை
யிடும்பா தொளித்துப் பிழையாம லாண்மையிலார்மதிகெட்
டடுபோர் புகழ்நீச்சசறியா தவனைக்கீ ழாழிழுத்துக்
கொடுபோமவ் வீரனுக்கு மேயச்சுதானந்த கோவிந்தனே! (௪௩)

தளிரோ யனையமெய்ப் பெண்டிர் கணவன் றனையிகழ்ந்து
வெளியே புறப்பட்டுக் கற்பழித் தாற்குல மேன்மையுண்டோ
நளிரோ தரும்புன ரேய்ந்துடம் பெங்கு நனைந்ததற்பின்
குளிரா தப்பாலென்பரோ யச்சுதானந்தகோவிந்தனே. (௪௪)

சோற்றுக் கடன்கொண் டிருக்குஞ் சரீரந் தொலையுநில்லா
தாற்றுப் புனலின் குமிழிபெண் றேங்கி யலைவர் கொல்லோ
நூற்றுக் இருப்பவர்க் கைம்பதிற் சாவில்லை நூற்றுக்கப்பால்
கூற்றுக் கிரையென் றெண்ணு ரச்சுதா னந்தகோவிந்தனே. (௪௫)

நன்றிசெய் தாரொன் றறியாமற் றீங்கு நமக்குச் செய்தா
ரொன்று முனிய வொண் ணாதுகுழந்தை யிளந்தசையைத்
தின்றெதிர் வந்தது கீரியென் றந்தணன் றேவிமுன்னாள்
கொன்ற பழங்கதை யாமச்சு தானந்த கோவிந்தனே. (௪௬)

அடிகொண்ட ளந்திட்ட கோட்டை யரணஞ்செய் தாரிருப்பக்
கெடிகொண்ட வேந்தர்கைக்கொள்வா ரவரைப்பின்கிட்டவொட்டார்
படிகொண்ட மண்ணிற் கறையா னிடும் புற்றிற்பாம்புவந்து
குடிகொண் டிருப்பது வாமச்சு தானந்த கோவிந்தனே. (௪௭)

தெட்டிப் பறிக்கின்ற வேசியர் வீட்டிற் றிரிந்தலையும்
மட்டிக் குலாமருக் காசார மேன்றெய்வ வந்தனையேன்
பட்டிக் கொதுங்கி யடிபடு மூர்க்கரும் பன்றியிட்ட
குட்டிக் கொருசந்தி யேனச்சு தானந்த கோவிந்தனே. (௪௮)

நடைகற்கு முன்னங் கொடைகற்ற பேர்க்கு நடக்கைவந்தால்
புடையுற் றெவருந் துதிக்க வணங்கிப் புகழ்பெறுவார்
அடையப் பவிஷு வந் தாலற்பருக் கர்த்த ராத்திரியில்
குடையைப் பிடியென்பர் காணச்சு தானந்த கோவிந்தனே. (௪௯)

கண்டனைக் கேற்ற வளாய்க்குல மானநற் கற்பினளாய்த்
தெண்டனைக் கஞ்சி நடப்பவ ளாய்மணஞ் செய்வதல்லால்
பிண்டமுந் துண்டமு நேர்ந்தே பிடாரியைப் பெண்டுவைத்துக்
கொண்டவன் பேயனன் றோவச்சு தானந்த கோவிந்தனே. (௫௰)

பொடிச்செல்வம் யாசகச் செல்வங் கொடுமை பொருட்செல்வமோ
நொடிச்செல்வ மீதலில்லாச் செல்வம் வீண்செல்வ நூற்றுக்குமே
மிடிச்செல்வ மின்றிச் சுகசீவியாய்க் கொழு மீதிகொண்ட
குடிச்செல்வ மேசெல்வங் காணச்சுதானந்தகோவிந்தனே. (௫௧)

வண்டானது மெள்ளப் பூமணங்கொள்ளும் வகையதுபோல்
பெண்டாசை யுள்ளவர் காமசம்போகம் பெறுவ தல்லால்
கண்டா தரவின் மலரொடுத் தேகசக் காமுகந்து
கொண்டான் மணந்தரு மோவச்சு தானந்தகோவிந்தனே. (௫௨)

அண்டினர்க் கீபவர் தாமே தருவதல் லாரிரப்போர்
தெண்டனைக் காகக் கொடுப்ப துண்டோசெழுங்காய்மரத்தில்
கண்டிடி னஃதைக் கனியாத முன்னங் கனியைக்கல்லால்
கொண்டடித் தாற்கவை யோவச்சு தானந்த கோவிந்தனே. (௫௩)

விடுப்பார் பிழைக்கும் வழியினல் லோன்றி வேறுபட்டக்
கெடுப்பார் வசஞ் செய்வமோ நம்பி னோக் கிளிப்பிள்ளையை
எடுப்பார் கையாரவளர்ப்பாரல்லா லெட்டிப் பூனையின்கைக்
கொடுப்பா ருலகிலுண் டோவச்சு தானந்தகோவிந்தனே. (௫௪)

உண்டான குற்றஞ் சகியாமல் வேந்தனுத் தாரமிட்டால்
திண்டாடத் தண்டனை செய்வார்க்குக்குற்றமுந்தெண்டமுண்டோ
கண்டாமல் விற்பிடித தெய்வா ரிருக்கக்கண் டம்பைநொந்து
கொண்டாலவ் வம்பென் செயுமச்சு தானந்த கோவித்தனே. (௫௫)

வருபுத் திரவிச்சை யாற்றெய்வம் வாழ்த்திவணங்கிடுவார்
தருபுத் திரனைப் பெறிற்கா வடிகட்டித் தாய்தந்தையை
ஒருபுத் தி னுஞ் சுமந்த துண்டோ வுலகம்புகழக்
குருபுத் திரன்சுமந் தானச்சு தானந்தகோவிந்தனே. (௫௬)

கதிப்பா னடத்துங் குதிரையும் யானையுங் காலபலமும்
மதிப்பார் புகல்சுத்த வீரர்க்குச் சொர்க்கம் வருவதல்லால்
துதிப்பார்க்குங்கொக்கரிப்பார்க்குமுண்டோ துணிந்தேநெருப்பில்
குதிப்பா ளொருத்தியன் றோவச்சு தானந்த கோவிந்தனே. (௫௭)

தரங்கிக் குவித்துத் தளருமென்னுவிக்குன் றூமணைத்தாள்
இரங்கித் தருவதெக் காலஞ் சொல்லா யெழுபாருருமுண்டு
பாரிகட் டுசலினும் பாலாழியினும் பசும்பொன்னிருழ்
அரங்கத்தி னுந் துயில் வாயச்சு தானந்த கோவிந்தனே. (௫௮)

மஞ்சனந்தேடி மலர்தேடி யுன்னை வணங்கப்பெற்றேன்
நெஞ்சகந் தன்னி னினைக்கப் பெற்றே னினையாவிடினும்
அஞ்சலென் றென்னை யுனக்கேபரமடலாழிகொண்டு
குஞ்சரங் காத்தவனே யச்சுதானந்த கோவிந்தனே. (௫௯)

தேனே யெனுமொழி மானுர் கலவியிற் சேர்ந்துமினும்
தானே யெனக்குன் பதந்தருவா யன்று சானகிக்காய்
மானே யெனவந்த மாரீசன் மேற்செலவாளிதொட்ட
கோனே சக்ராயுதனே யச்சு தானந்த கோவிந்தனே- (௬௰)

சற்சன ராயுறவுற்றூரைப் பேணித்தவத்தியல்பாய்
நற்சன னங்க ளெடுத்தாரை மெச்சுவர் நாணமில்லாத்
துர்ச்சனப்பிள்ளைகட் கூரார்சொல்வார் புத்தியென்றுலகு
குற்சிதஞ் சொல்லுமெய் யேயச்சுதானந்த கோவிந்தனே. (௬௧)

தெள்ளா ரமுதக் கடற்கரை பெட்டிச் செழுங்கனியைப்
புள்ளானது பசிகூர்ந் தாலுமே புசியாது கண்டீர்
தள்ளாது கொள்ளிகொண் டேறின வென்று தலைசொறிந்து
கொள்ளா ரெவருஞ்சொன் னேனச்சு தானந்தகோவிந்தனே. (௬௨)

மிடித்தாலு மேறப் பசித்தாலு நல்லவர் மேலாதப்பி
வடித்தா தரத்தொடு கட்குடிப் பார்மனைவாசல்புகார்
படித்தாவின் பால்கொண்டு கள்ளிறக்கும் பனங்காட்டிற்சென்று
குடித்தாற் பனங்களென்பாரச்சு தானந்த கோவிந்தனே. (௬௩)

தேறியமான முடையோர் பெருமை சிறுமையுற
மாறிய வீனவிர்த் திக்குளராய் நின்று வாழ்வரென்னல்
வீறிய பூமலர் விற்குங் கடையில் விறகுவிலை
கூறிய வாறொக்கு மேயச்சு தானந்த கோவிந்தனே. (௬௪)

நிறையா யரசர் தயவுசெய் தாற்கலி நீங்கியிளம்
பிறையாய் வளர்ந்து நிரம்புனல் வாழ்வு பிறியப்பட்டு
மறையால் விளங்கும் பிர்ம்மா நினைந்தால் வர்த்திக்கும்வயது
குறையா தெனச்சொல்வ ரேயச்சுதானந்த கோவிந்தனே. (௬௫)

இணக்கா திரார்வல் விரும்பொடிந் தால்வைத் திருதலையும்
வணக்கா திரார்வின் னிமிர்ந்ததென் றூற்புல்லர் மாறுபடும்
பிணக்கார் தவிர்ப்பவர் நாய்வாலை நீளப்பிடித் திழுத்துக்
குணக்கா ரொடுக்கவல் லாரச்சு தானந்த கோவிந்தனே. (௬௬)

தம்பின மானவர் கையினைத்தேசர ணென்றடைந்தால்
வம்பினென் றூதரிக் கத்தகுந்தள்ள வழக்கல்லவே
விம்முமென் கொங்கை சரிந்தே யுதரத்தின் மேல்விழத்தாங்
கும்மெனச் சொல்லுவ ரேயச்சு தானந்த கோவிந்தனே. (௬௭)

சதிசெயு நீலியைப் பெண்டென்று கொள்பவர் தங்கள்கெடு
மதியதுவா மவர்மேற் குறையில்லை வையாளி விட்டால்
கதிபெற வேநடவா தமைகண்ட கழுதையைநற்
குதிரையென் றேற்றக்கொள் ளாரச்சுதானந்தகோவிந்தனே (௬௮)

பெண்டகு மில்லவள் வந்தமுகூர்த்தம் பெருகுஞ்செல்வம்
உண்டவர் வாழ்வு மனையிலெந்நாளு முடுக்கப் பொற்பூண்
பண்டமிலையெனிற் பானைபிடித்தவள் பாக்கியங்காண்
கொண்டவ னென்னசெய் வானச்சுதானந்த கோவிந்தனே (௬௯)

அடும்பழி காரனை வெட்டாமன் மன்னித் தனுப்பிவிட்டால்
தொடும்பழி பேச வழக்குமுண்டோ தொடர்ந்தேபிடித்த
உடும்பது போயினும் போகட்டுங் கைவிடுடன் றுண்மைசொல்வார்
கொடும்பழி யேன் சுமப்பாரச்சு தானந்தகோவிந்தனே. (௭௰)

வள்ள லெனத்தருந் தாதாவென்றேதினம் வந்துவந்து
கள்ள மனத்திற் பொருள்கேட்கொணாது கண்டீர் திரளாய்
உள்ள கரும்புதித் திப்பென வேருடனே பிடுங்கிக்
கொள்ள நினைப்பர்களோ வச்சு தானந்த கோவிந்தனே. (௭௧)

தொடுத்திடு மூழ்வினை போகாதெவர்க்குந் தொடருமுற்றும்
இடுக்கண் வருமத னல்வருங்குற்றமு மென்பதல்லால்
தடுத்திடுங் காலி னிகளந்தனைப்பற்றித்தானெடுத்துக்
கொடுத்திடும் யானைகண் டாயச்சு தானந்தகோவிந்தனே. (௭௨)

விதிமுறை நீதிச்செங்கோல் கோடத் தேசமெலிந்தலைய
மதிலரண் செய்யி லெவர்க்காகு நந்தவன மழிந்தால்
எதிரொதி ரோடி யகார்த்தவ மேயிலென்னேற் றந்தருங்
குதிரைகண் மேய்ந்திடிலென் னச்சுதா னந்த கோவிந்தனே. (௭௩)

செழித்திடு செல்வப் பிறந்தகம் போய்த்திரும் பாவெனவே
கழுத்திடு தாலிகையாற் கட்டினோன் பலகாலும் வந்தே
அழைத்திடக் கூட்டி விடாரேலி டையனுக் காடுநன்றாய்க்
கொழுத்திடி லாபமன்றோ வச்சுதா னந்த கோவிந்தனே. (௭௪)

தேட்டாளர் தம்மிச்சை யாற்றேடுங் கைப்பொருடேடும்வழி
காட்டா ரவர்க் கும்பின் வில்லங்கமாகுங் கண்டீர் கதவு
பூட்டாத பொக்கிஷ வீட்டினிற் கொள்ளைக்குப்போய்ப்புகினுங்
கூட்டாகு மோவென்ப ரோயச்சுதானந்த கோவிந்தனே. (௭௫)

வணங்கா ருன்பாதங்கள் வாழ்த்தாருன் னாமங்கள் வாழ்த்திநித்தம்
இணங்கா ரறிவற்ற புல்லர் நல்லோர் தம்மியற்கைபெண்ணார்
கணங்கா னுங்கட்டிக் கரும்புகின் பார்க்குக் கசப்பதுவாய்க்
குணங்கா னெனச்சொல்வ ரோயச்சுதா னந்த கோவிந்தனே. (௭௬)

இடைப்படச் செத்தவன் பிள்ளை நன்றாக விருப்பவன்கை
அடைக்கல மென்றால் கன்றெனு மேயது போற்றமியேன்
மிடைப்படப் பார்த்திருந் தாற்றகுமோபசு மேய்த்தவந்நாள்
குடைக்கு டேந்தினை யேயச்சுதா னந்த கோவிந்தனே. (௭௭)

பன்றி யுடனுற வாகப்பழகினும் பாற் பசுவின்
கன்று மலத்தைப் புசிக்கு மென்பாரக் கதையதுபோல்
சென்றுற வாடிக் கயவர்பின் னேதிரிந் தாலறிவு
குன்றும் வசைக்கிட மாமச்சு தானந்த கோவிந்தனே. (௭௮)

நிணத்தோத மிட்ட் திணைப்பாயன் மீதினி னித்திணைகொள்
தணத்தோகை யைவந் தெழுப்புந் தபனன் சமயமறிந்
திணத்தோ வெனக்குக் கிடங்கூட்பிடாம லிரவிடநாய்
குணத்தோ விடியுமென் பாரச்சு தானந்த கோவிந்தனே. (௭௯)

தேறிய நெஞ்சிற் பரிசுத்தனுசத் தெளிந்தவந்நாள்
மாறிய வன்கண ருண்மை கொள்ளாரொரு வன்வயிற்றைப்
பீறிமுன் காட்டிட வித்திர சாலப் பிரமையெனக்
கூறிய வாறொக்கு மேயச்சுதா னந்த கோவிந்தனே. (௮௰)

நடந்தார்க்கு நாடெங்கு நல்லுறவாகு நடை பொழிந்து
கிடந்தார்க்குப் பாய லுறவன்றி யேனென்று கேட்பவரார்
இடந்தா வெனக்குன் பதமே கதிசித் திடச்சியர்பால்
குடந்தாங் கியமுகுந் தாவச்சு தானந்த கோவிந்தனே. (௮௧)

தருவை யொப்பாமைந் தருவென்ப தோபர சற்புருடன்
உருவை யொப்பாருத் தமராவ ரோகுண மொப்பதல்லால்
கருவி யொப்பாயு யரப்பறந்தாலுங் கருடனுக்கூர்க்
குருவி யொப்பா மென்ப ரோவச்சுதா னந்த கோவிந்தனே: (௮௨)

ஐங்காதம் போயுமகப் பைவில யனாக்கா சென்பர்காண்
எங்காகிலும் பணமிட்டுக்கொள்ளார் குணவீனர்சென்றால்
சிங்காரமாகிய பொற்பூ ஷணற்றியாகம் பெறார்
கொங்கார் துளபத்தனே யச்சுதா னந்த கோவிந்தனே. (௮௩)

வாலியைக் கொன்று சுக்ரீவனைப் பட்டத்தில் வைத்து முந்நீர்
வேலைகடந்தன் றிலங்கையில் வீடணன் றன்னைவைத்தாய்
காலியை மேய்த்துள்ள பால்குடித்தாய் நற்கரும்பு தின்னக்
கூலி கொடுப்பவரா ரச்சுதா னந்த கோவிந்தனே. (௮௪)

திண்டாட வெட்டும் ரணகளத்திற் செயங் கொள்வழி
கண்டா லெதிர் நின்ற கூளப் படையைக்கைக் கொண்டுபுகார்
அண்டாத வெள்ளத்தி லோடம் விடாமலடு நரிவால்
கொண்டாறு நீந்துவரோ வச்சுதா னந்த கோவிந்தனே. (௮௫)

மழைக்குத் தண்ணீர் கொண்டு வார்ப்பவரா ரிந்த வையகத்தே
பிழைக்கப் பொழிவ ததன்குணங்காண் பெறும்பேற்றினுக்கே
அழைக்கக் கயேந்திரன் மூலமென்றோதிய வன்பினுள்ளங்
குழைக்கக் கராவரித்தா யச்சுதா னந்த கோவிந்தனே. (௮௬)

நள்ளிருட் போதில் விளக்கிட்டதா நல்லவரிருந்தால்
தெள்ளிய சீர்பெறு வீட்டுக்கழகென்பர் தீங்கர் வந்தால்
தள்ளி விடாமற் குடிவைத்துக் கொள்ளத் தகாதிறப்பில்
கொள்ளி வைத்துக் கொள்வரோ வச்சுதானந்தகோவிந்தனே. (௮௭)

பொரக்கத்தி கட்டிக் கொண்டே துணை யானவர்போர்முகத்தில்
வரக்கொக் கரித்தெதி ரோடிப் பொருதில் வரும்விசயம்
அரக்கர்க் கெதிர்மலைந் தந்நாளி லங்கை யழித்ததுவும்
குரக்குப்படையல்லவோ வச்சுதானந்தகோவிந்தனே. (௮௮)

வல்லா யமர்செய் திளைத்தாய் கைநாளை வருகவெனச்
சொல்லா திராரிளைப் பாறுமென் பார்சுத்த வீரர்படை
எல்லா மிழந்து நிராயுதனாய விராவணனைக்
கொல்லா தொருவவிட் டாயச்சுதா னந்த கோவிந்தனே. (௮௯)

அண்டாத துர்க்குண வீனருஞ் செல்வர்களா யிருந்தால்
கண்டாதரவி னழைத்தால் வருவர் கருசினங்கள்
உண்டாங் குழந்தையுந் தெய்வமு நித்தமுறவுசெய்து
கொண்டாட முன்விற்கு மேயச்சுதா னந்த கோவிந்தனே. (௯௰)

பூணத்த கும்புகழ் பூஷணங் கொள்ளப் பொருளுதவா
வீணர்க்குங் கீர்த்திக்கு மெத்தனை தூர மிகுஞ்செல்வராய்க்
காணத்தை யுண்ணுங் குதிரையி லேறிக் கவிக்குலம்போல்
கோணக்கொம் பேறிலென் னுமச்சு தானந்த கோவிந்தனே: (௯௧)

வெஞ்சரக்குப்பை தொடுத்தெய்ய வேவெற்றிராகவன்கைச்
செஞ்சரத்துக்கிணை யாமென்ப ரோவிட்ட தீனிதின்று
சஞ்சரிக்கும்பன்றிக் குட்டிகடாமத தாரைபொங்குங்
குஞ்சரக் கன்றுக்கொவ் வாதச்சுதா னந்த கோவிந்தனே: (௯௨)

நெஞ்சார வஞ்சகர்க் கெத்தனை செய்யினு நேசங்கொள்ளார்
தஞ்சாயன் மென்குயின் முட்டையைத் தன்முட்டை யாமென்றெ
எஞ்சா தடைகிடைந் தேகருங்காக மிகல்விளங்குங் [ண்ணி
குஞ்சாகிப் பூங்குயி லாமச்சுதா னந்த கோவிந்தனே. (௯௩)

ஆதிய வெஞ்சினத் தீமூளச் செய்பி லரசர் கொல்வார்
தேறிய நெஞ்சிற் றனைக்கொல்ல வந்த சினப்பகலை
மாறிடக் கொன் றிடப் பாவ மிலையென்று வையகத்தோர்
கூறிய வார்த்தைபொய் யோவச்சு தானந்த கோவிந்தனே. (௯௪)

வம்பா வசைக்கவி நூறுசொன்னாலும் வைதாலு மென்னார்
தம்பாடு சொல்லி வழிவிடுவார்க டனப்புலையர்
செம்பா லடித்திடு கா சொன் றுதவிசெய் யார்குதிரைக்
கொம்பா கிலும்பெற லாமச்சு தானந்த கோவிந்தனே (௯௫)

சூடவராதிட்ட பொற் பூஷிணங்க டோவெனக்கொண்
டாடவராது சதுரங்க சேனையு மாண்மையும் போம்
ஓடவ ராதெம தூதர் வந்தாலுள்ள மொக்கமுந்தன்
கூடவ ராதென்ப ரோயச்சு தானந்த கோவிந்தனே. (௯௬)

தண்டா மகிழ்செயுந் தாதாக் களிரெருத் தன்மறுத்தல்
கண்டா லதுகொண்டு தாழ்வல்ல வேகறக் கும்பசுக்கள்
உண்டான பாற்கறக்கும் பசுவாயிரத்தொன் றுதைத்துக்
கொண்டாற் குறையென் பரோவச்சு தானந்த கோவிந்தனே, (௯௭)

திறமுஞ் செங்கோலு முளமன்னர் நாட்டிற் சிந்தாகுலந்தீர்ந்
துறவுங் குடிசுக மென்றிருப் பார்பயி ரிட்டுண்பர்காண்
அறவுங் கொடுமை செயுமன்னர் சீமைக்கு ளாரிருப்பார்
குறவன் குடியிருப் பாமச்சு தானந்த கோவிந்தனே, (௯௮)

பல்லால் விஷங்கக்கு நாகந்திகைத்துப் பயறதொ துங்கி
நல்லார்கண் காணவந் தாலுங்கொல்லார் நன்னலர்வரினும்
பொல்லாதவரிவனென்னார் மனம்பொறுத் தேயவனைக்
கொல்லாமற் போமென்ப ரோயச்சுதானந் கோவிந்தனே (௯௯)

செல்வாய்ப் படும்பனை யேட்டெழு தாமறைச்செம்மொழிபோற்
சொல்வார்சொ னம்பத்தகுமதல்லாற்சொற்புரண்டிருக்கும்
வல்வாய்ப் புலையர்சொனம்புவ ரோநித்த மாடுதின்னுங்
கொல்வாருக் காணையுண்டோ வச்சுதானந்தகோவிந்தனே (௱)

முந்தச் சனனத்தில் யான்செய்தபூசை முயற்சி யிற்கோ
விந்தச்சதகம் விண்ணப்பஞ் செய்தேனென்வினை தொலைத்தேன்
இந்தச் சனனத்திற் றுன்பப்படாம லிருந்திடவை
குந்தப்பதவி பெற்றேனச்சுதா னந்த கோவிந்தனே (௱௧)

கோவிந்தசதகம்-முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யோபயவேதாந்தாசார்ய-
ஸ்ரீமத்ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரணபத்தாந்த:கரணுணும்(ணும்
ஸ்ரீமத்வரவரமுநிசரணநளினவிந்யஸ்தஸமஸ்தாத்மபராணும்.
ஸர்வதந்த்ரஸ்வதந்த்ராணுமகிலமஹீபாலாலங்கார
கிரீடமணிகடிதபாதபீடபர்யங்காசார்யாணும்

திருக்குறுங்குடி

ஸ்ரீமத்பேரருளாளராமாநுஜஜீயர்விஷயம்

கட்டியம் - ஊசல் - லாலி - எச்சரிக்கை
மங்களம்

இவை
ஸ்ரீமத்-உ-வே-திருவெவ்வுண்மாநகர்
ஸ்ரீமான்-ஆஸூரி
திருவேங்கடாசாரியர்சிஷ்யரான

வேங்கடரங்கராமாநுஜதாஸர்
விண்ணப்பம்

ஸ்ரீமத்யதீந்த்ரப்ரவணப்ரபாவப்பிள்ளைலோகந்திருக்கடன்மல்லை
உ-வே-தலசயனத்துறைவார்திவ்யசரணஸம்பந்தரும்
சென்னைபுரி
திருமங்கையாழ்வார்ஸபைத்தலைவருமாகிய
திருநீர்மலை
வகுளாபரணதாஸர்ப்ரோபணத்தால்
ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யோபயவேதாந்தா
சார்யராயெழுந்தருளியிருக்கும்-திருநீர்மலை-கந்தாடை
அஷ்டகோத்ரம்

ஸ்ரீமான்ராகவாசாரியர்

திவ்யஸ்ரீசரணகமலாம்ருதபானஸஜ்ஜீவனராகிய
வாயலூர்

ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களால்

திருவொற்றியூர்

பரசுராமமுதலியாரது

பரப்ரம்ஹமுத்ராக்ஷரசாலையிற்பதிப்பித்து
சிஷ்டவிஷயத்தில்
விநியோகிக்கப்பட்டன